செய்தி வெளியீடு எண்:298 நாள்: 19.06.2021

## <u>செய்தி வெளியீடு</u>

**அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பாடநூல்களை வழங்கி, கல்வித் தொலைக்காட்சியில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான அனைத்து பாடங்களுக்கான நிகழ்ச்சிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் வண்ணமாக, அம்மாணவர்களுக்கு அரசு, பாடநூல்களை வழங்கி வருகிறது.

2021-2022ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக நடைபெற்று வரும் நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (19.6.2021) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பாட நூல்களை வழங்கியும், கொரோனா பெருந்தொற்று பரவல் காரணமாக பள்ளி செல்ல இயலாமல் இருக்கும் மாணவர்கள், வீட்டில் இருந்தபடியே கல்வி பயில ஏதுவாக 1 முதல் 12 வரை அனைத்து வகுப்புகளுக்கும் உரிய அனைத்து பாடங்களுக்குமான கல்வித் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தொடங்கி வைத்தார்கள். இத்திட்டம் சுமார் 292 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படுகிறது. இதனால், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 69 இலட்சம் மாணவர்கள் பயன் பெறுவர்.

அதனைத் தொடர்ந்து, அம்மாணவ, மாணவியர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நலம் விசாரித்து, அவர்களுக்கு பேனா மற்றும் சாக்லேட்டுகளை வழங்கி கலந்துரையாடினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

*************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9